// தேர்வுகள் // // தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 9200 / ஆ 5/ 2019 நாள் 13– 01 – 2020

பொருள் தேர்வுகள் – வேலூர்மாவட்டம் – மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வு பிப்ரவரி 2020 – செய்முறைத் தேர்வு நாட்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கூட்டம் நடைபெறுதல் சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 000298 / எச் 1 / 2020 நாள் 08–01–2020

•••••

வேலூர் மாவட்டம், பிப்ரவரி 2020ல் நடைபெறவுள்ள மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் மற்றும் செய்முறைத் தேர்வுகள் சார்பான ஆயத்தக்கூட்டம் நடைபெறும் விவரங்கள் கீழ்காணும் விவரம் படி நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அனைத்து மேல்நிலை மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

## செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் விவரங்கள்

| வ. எண் | வகுப்பு | செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் | மதிப்பெண் பட்டியல்கள் ஒப்படைக்கும் இடம் மற்றும் நாள் | செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் பள்ளிகள் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | +2 1 Spell | 03-02-2020 to 07-02-2020 (All Subject) | **08–02–2020** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | அனைத்து மெட்ரிக் மேல்நிலை பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் |
| 2 | +2 2 Spell | 07-02-2020 to 13-02-2020 (All Subject) | **14–02–2020** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | அனைத்து அரசு, நகரவை, ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளிகள் |
| 3 | +1 1 Spell | 14-02-2020 to 19-02-2020 (All Subject) | **20–02–2020** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | அனைத்து மெட்ரிக் மேல்நிலை பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் |
| 4 | +1 2 Spell | 20-02-2020 to 25-02-2020 (All Subject) | **26–02–2020** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | அனைத்து அரசு, நகரவை, ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளிகள் |

**மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கூட்டம் நடை பெறும் விவரம்**

| வ. எண் | கூட்டம் நடைபெறும் நாள் | கூட்டம் நடைபெறும் நேரம் | கூட்டத்தில் கலந்துக்கொள்ள வேண்டியவர்கள் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 30–01–2020 | காலை 10.30 மணி | மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முதல்வர்கள் / நிதியுதவி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் |
| 2 | 30–01–2020 | மதியம் 02.00 மணி | அரசு / நகரவை / ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் | |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி உரிய நேரத்தில் செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் விவரங்கள் சார்ந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவித்து மாணவர்களை தயார் நிலையில் இருக்கும் வண்ணம் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மதிப்பெண் பட்டியல்களை உரிய காலத்தில் ஒப்படைக்குமாறும் செய்முறைத் தேர்வுகளுக்கான உபகரணங்கள் மற்றும் இட வசதிகள் தயார்நிலையில் வைத்திருக்கவும் உரிய நேரத்தில் செய்முறைத் தேர்வுகள் சார்பான மதிப்பெண் பட்டியல்களை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளவும் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் மூலம் பெறப்பட்ட செய்முறைத் தேர்வுகள் சார்பான அறிவுரைகள் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. செய்முறைத் தேர்வுகள் சார்பான அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறும் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

இணைப்பு
+2 செய்முறைத் தேர்வுகள் சார்பான அறிவுரைகள்
+1 செய்முறைத் தேர்வுகள் சார்பான அறிவுரைகள்

பெறுநர்
அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மேல்நிலை மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.